Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 22, 2022

வெள்ளிக்கிழமை ஜூலை 22,2022 | ஒளி: 08 கதிர் 055 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## திங்கள் டெங்கொழிப்பு தினமாக பிரகடனம்



நாட்டில் வேகமாக டெங்கு நோய் பரவி வருகின்ற நிலையில், எதிர்வரும் 25ஆம் திகதியை டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

முழுச் செய்தி P2

## பாராளுமன்றத்துக்கு அமைச்சரவை பொறுப்பு கூறும்

### புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து அக்கிராசன உரை புதிய வேலைத்திட்டங்களை முன்வைக்கவுள்ளேன் நிறைவேற்று அதிகாரத்தை குறைக்கவும் இணக்கம்

ஆர்.யசி

நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்களை குறைப்பதுடன், நாட்டுக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்புக்குகூற வேண்டிய அமைச்சரவையை உருவாக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். தனது புதிய வேலைத்திட்டங்கள் மற்றும் கடந்த காலத்தில் தாம் வலியுறுத்திய விடயங்களை அக்கிராசன உரையின் போது முன்வைக்கவுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P2

## இன்று புதிய அமைச்சரவை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை இன்று (22) நியமிக்கப்படவுள்ளது. கொழும்பு -07 உள்ள பிரதமர் அலுவலகத்தில் புதிய அமைச்சரவையை காலை 9 மணிக்கு ஜனாதிபதி நியமிப்பார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று (21) மாலை அறிவித்தது.

## நந்தலால் நம்பிக்கை

### டிசம்பரில் ஐ.எம்.எப் நிதி கிடைக்கும் என்கிறார்



இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் மேலும் ஐந்து மாத காலத்துக்கே இந்த நெருக்கடி நிலைமை காணப்படும். அதற்குள் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான தீர்வினை காண முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P2

## ஜனாதிபதி ரணில் நினைவில் கொள்வார்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வாழ்த்து



மிக மோசமான நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துள்ள தருணத்தில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இது எங்கள் வரலாற்றில் மிக முக்கியமான தருணம், இலங்கைக்கு இருதய சுத்தியும், தொலை நோக்கும், தாராள மனப்பான்மையும் கொண்ட தலைவர்களே தேவை எனவும் தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P2

## சாகலவுக்கு வாய்ப்பு?



ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதையடுத்து, வெற்றிடமாகியுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, சாகல ரத்னாயக்க, அகிலவிராஜ் காரியவசம், ருவன் விஜேவர்தன ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

முழுச் செய்தி P2




## பதவிப்பிரமாணம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நேற்று (21) பதவியேற்றுக்கொண்டார்.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முதற்பெண்மணி பேராசிரியர் மைத்திரி விக்ரசிங்க உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஜனாதிபதி பதவி வெற்றிடத்துக்கு அடுத்துவரும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் இரகசிய வாக்கெடுப்பு நேற்று முன்தினம் (20) நடைபெற்றதுடன்,

முழுச் செய்தி P2

## "கோ ஹோம் ரணில்" பூங்காவில் இடம்

காலி முகத்திடலில், போராட்டக்காரர்கள் "கோ ஹோம் ரணில்" போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இந்நிலையில், அந்தப் போராட்டத்தை தடையின்றி நடத்த, கொழும்பு - விஹாரமகாதேவி பூங்காவில் இடமொன்று ஒதுக்கி தரப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P2

## ராஜபக்ஷர்களின் நண்பன் நானல்ல



பா.நிரோஸ்

பிரதமரை தன்னால் தெரிவு செய்ய முடியாது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காண்பிப்பவர்களே பிரதமராக தெரிவு செய்யப்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நான் மக்களுக்கே நண்பன், மாறாக ராஜபக்ஷர்களுக்கு ஒருபோதும் நான் நண்பன் அல்ல எனவும் தெரிவித்தார்.

முழுச் செய்தி P2

## பதவிப்பிரமாண நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதா?

பா.நிரோஸ்

ஜனாதிபதி பதவியேற்கும் நேரத்தின், எந்த விதமான மின்சாரத் துண்டிப்புகளும் பாராளுமன்றத்தில் ஏற்படவில்லையென படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்ததுடன், திட்டமிட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

முழுச் செய்தி P2

## மனித உரிமைகளுக்கே பாதிப்பு

### சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகள் இலங்கையின் உதவிக்கு முன்வரவேண்டும்



மிக மோசமான அரசியல் கொந்தளிப்பினால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பணவீக்கம், பொருட்களின் விலை அதிகரிப்பு, ,மின்சார தட்டுப்பாடு, எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சி ஆகியன ஒட்டுமொத்த மக்களுக்கான மனித உரிமைகளை அனுபவிப்பதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் கவலை

முழுச் செய்தி P2

## உலக உணவுத்திட்டம் உதவிகளுக்கு இணக்கம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ள உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லியை

முழுச் செய்தி P2

## வெளியேறுகிறார் தம்மிக்க



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக் ஷவின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்ட தம்மிக்க

முழுச் செய்தி P2

## இறுதிப்பக்கங்களை ரணிலே எழுதுவார்



பா.நிரோஸ்

நாட்டின் பொருளாதார நெருக்கடி அடுத்த இரண்டு மாதங்களில் உச்சமடைந்து மிகப்பெரிய மக்கள் போராட்டம் வெடிக்கும். இதனை கட்டுப்படுத்தும் முயற்சியின் போது, நாட்டில் இரத்த வெள்ளம் ஓடலாமென எச்சரித்துள்ள தேசிய சுதந்திர

முழுச் செய்தி P2

## சட்டவிரோதமாக செல்லமுயன்ற 33 பேர் கடற்படையிடம் சிக்கினர்



இலங்கை கடற்படையினரால் நீர்கொழும்பு கடற்பரப்பில் நேற்று (21) அதிகாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடல்மார்க்கமாக வெளிநாடுக்குச் செல்ல முயன்ற 33 பேர் கடற்படையினரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளனர்.

சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், மீன்பிடி படகு ஒன்றை சோதனையிட்ட போது, குறித்த 33 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் படகில் பணியாற்றும் நால்வர் உள்ளிட்ட 19 ஆண்களும் 9 பெண்களும் 5 சிறுவர்களும் அடங்குவதாக கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்படையினரின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்டுள்ள குறித்த 33 பேரும் 18 தொடக்கம் 65 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் சிலாபம், மாரவில, திருகோணமலை, மட்டகளப்பு மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மேலதிக விசாரணைக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# நந்தலால் நம்பிக்கை

பொருளாதார மீட்சிக்கான தெளிவான வேலைத்திட்டமும், அதற்கான நகர்வுகளை கையாளும் திறனும் இலங்கையிடம் உள்ளது. அதனை பின்பற்றுவதன் மூலமாக இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எதிர்வரும் 5 மாதங்களில் தீர்வு காண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கையை மிக விரைவில் எட்ட முடியும் என்றும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியுதவி பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை புதிய அரசாங்கம் எவ்வாறு அணுகுகிறது என்பதன் மூலம் நேரம் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ள அவர், சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற தொழில்நுட்ப மட்ட கலந்துரையாடலின் போது இலங்கையின் திட்டம் என்னவென்பது தொழில்நுட்ப குழுவிடம் முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பணியாளர் மட்ட பேச்சுவார்த்தை மற்றும் தொழிநுட்ப பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வரும் பட்சத்தில் இவ்வாண்டு டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார். அடுத்த சில வாரங்களுக்கு பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கி பணம் வழங்கினாலும், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான குறுகிய கால நிதி வசதிகளை நட்பு நாடுகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பொறுப்பு புதிய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும். எவ்வாறாயினும், ஒளியை காணக்கூடிய சுரங்கத்தின் விளிம்பினை அடைந்துள்ளோம். எனவே, மக்கள் பொறுமையுடன் செயற்பட வேண்டும் எனவும் மத்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# பொறுப்பு கூறும்

அதற்காக பாராளுமன்ற அமர்வை ஒத்திவைத்துவிட்டு, புதிய அமர்வை கூட்ட வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க, நேற்று (21) பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் பாராளுமன்ற கட்சி தலைவர்கள் கூட்டமொன்று பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் நேற்றே இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் உள்ளிட்ட எதிர்க்கட்சியின் ஒருசிலர் மற்றும் ஆளுங்கட்சி பங்காளிக் கட்சிகளின் ஒரு சில தலைவர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர். இதில், சில முக்கிய விடயங்கள் குறித்த இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறிப்பாக ஜனாதிபதிக்கான அதிகாரங்களை குறைப்பது குறித்து எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியிருந்த நிலையில், ஜனாதிபதியும் அதற்கு சாதகமான விதத்தில் பதிலளித்துள்ளார். அதிகாரங்கள் குறைக்கப்படுவதுடன், மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய விதத்திலும், பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறவேண்டிய விதத்திலும் அமைச்சரவையை செயற்படுத்த வேண்டும் என்பதை தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் வலுப்படுத்துவதும், 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டுவந்து அதற்கான நடவடிக்கை எடுப்பதும் அவசியமான ஒன்றாகும், அதற்குரிய நடவடிக்கைகளை புதிய பாராளுமன்ற அமர்வுகளில் மூலமாக முன்னெடுக்க இணக்கம் காண வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரியவருகின்றது.

பாராளுமன்றத்தை சம்ரதாயபூர்வமாக 24 மணித்தியாலங்களுக்கு ஒத்திவைத்து மீண்டும் கூட்டி ஜனாதிபதிக்கான அக்கிராசன உரையை நிகழ்த்தி தனது வேலைத்திட்டங்களை முன்வைப்பதுடன், கடந்த காலங்களில் நாம் சகலரும் வலியுறுத்திய விதத்தில் 19ஐ பலப்படுத்தி, சுயாதீன ஆணைக்குழுக்களை செயற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளாராம்.

அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காமல் தேசிய ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தின் குழு அமைப்பை பலப்படுத்துவதற்கு யோசனைகளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் முன்வைத்துள்ளார். பாராளுமன்ற குழுக்களை முறையாக செயற்படுத்தி தற்போதைய நெருக்கடி நிலைமைகளை சமாளிக்கும் விதத்தில் செயற்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியும் தெரிவித்துள்ளார்.

# திங்கள் டெங்கொழிப்பு தினமாக பிரகடனம்

இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் தற்போது வரையில் **31,653** டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே எதிர்வரும் **25**ஆம் திகதியை டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்துவதற்கு



தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணில் நினைவில் கொள்வார்

எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவிற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். நாடு முன்னொருபோதும் முகங்கொடுத்திடாத வகையில் மோசமான சவால்களை எதிர்கொண்டுள்ள தருணத்தில் நாட்டின் ஆட்சி பொறுப்பை ஏற்றுள்ளார். இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டினால் தான் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என்பதில் எனக்கு



சந்தேகமும் இல்லை.

அவர்களின் குரல்கள் ஊழல்களில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளிற்கு எந்த இடமும் அளிக்காத அரசாங்கத்திற்கானது. இது மிகவும் கடினமான சவால், இதற்கு புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் சிவில் சமூக தலைவர்கள் தீவிர பங்களிப்பை செய்யவேண்டும். இது எங்கள் வரலாற்றில் மிக முக்கியமான தருணம், இலங்கைக்கு இருதய சுத்தியும், தொலை நோக்கும், தாரள மனப்பான்மையும் கொண்ட தலைவர்களே தேவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமைகளுக்கே பாதிப்பு

வெளியிட்டுள்ளனர்.

கடன் நெருக்கடி ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை நாம் அவதானித்துக்கொண்டுள்ளோம். கடன் நெருக்கடியானது உலக நிதி அமைப்பின் ஆழமான கட்டமைப்பு இடைவெளிகளை வெளிப்படுத்தியுள்ள அதே வேளையில் மேலும் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதை பாதித்துள்ளது எனவும் ஐ.நா.வின் வெளிநாட்டுக் கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐநாவின் விசேட நிபுணர் அட்டியா வாரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான எந்த முயற்சியினதும் அடிப்படையாக மனித உரிமைகள் காணப்படவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையின் நகர்வுகளும் அவ்வாறானதாக காணப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் வீழ்ச்சி உலகின் கவனத்தை உடனடியாக ஈர்க்கவேண்டும். மனிதாபிமான அமைப்புகள் மாத்திரமின்றி



சர்வதேச நிதியமைப்புகள் தனிப்பட்ட கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனைய நாடுகள் இலங்கையின் உதவிக்கு முன்வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார

# வெளியேறுகிறார் தம்மிக்க



பெரேரா பின்னர் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றார். எனினும் ரணில் விக்கிரமசிங்க மீதான கடுமையான விமர்சனங்களை கடந்த காலங்களில் முன்வைத்திருந்த நிலையில், தற்போது அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிமான செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் நேற்று முன்தினம் (20) கங்காராம விகாரையில் ஜனாதிபதி ரணில் மத வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த நிலையில் தம்மிக்க பெரேராவும் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதவிப்பிரமாணம்

இதில் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றியிருந்த ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகளைப் பெற்று அடுத்துவரும் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாகலவுக்கு வாய்ப்பு?

எனினும், இந்த மூவரில் சாகல ரத்னாயக்க அல்லது ருவன் விஜேவர்தன ஆகிய இருவருள் ஒருவருக்கு தேசிய பட்டியல் உறுப்பினர் வாய்ப்பு கிடைக்கவுள்ளதென அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து கடந்த இரண்டு தினங்களாக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தனவின் பெயர் முன்வைக்கப்பட்ட போதிலும் அவர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லையாம். இந்நிலையில் சாகல ரத்நாயக்கவை நியமித்து முதலீட்டு வேலைத்திட்டங்கள் சிலவற்றை முன்னெடுக்கும் நோக்கத்தில் ஜனாதிபதி உள்ளதாகவும் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

# ராஜபக்ஷர்களின் நண்பன் நானல்ல

ஜனாதிபதியாக நேற்று முன்தினம் (20) பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, கங்காராமை விஹாரையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது, நாட்டு மக்கள் மாற்றம் ஒன்று வேண்டுமென கோருகிறார்கள். நீங்கள் ராஜபக்ஷர்களின் நண்பர் தானே? அப்படியென்றால் எவ்வாறு மாற்றம் ஏற்படும்? என சர்வதேச ஊடகமொன்றின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

ராஜபக்ஷர்களுக்கு எதிராகவே நான் செயற்படுகிறேன். அவ்வாறான நிலையில் ராஜபக்ஷர்களின் நண்பராக நான் எவ்வாறு இருக்க முடியும்? இலங்கைக்கு நீங்கள் இன்று வந்துவிட்டு என்னை ராஜபக்ஷர்களின் நண்பர் என கூறுகிறீர்கள். ஊடகவியலாளராக வரும்போது அனைத்தையும் ஆராய்ந்த பின்னரே கேள்விகளை கேட்க வேண்டும். இதுபோன்ற கேள்விகளை கேட்க வேண்டாம் எனவும் ரணில் தெரிவித்தார்.

# உலக உணவுத்திட்டம் உதவிகளுக்கு இணக்கம்



அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார். நேற்று முன்தினம் (20) வொஷிங்டன் டி.சி.யில் இந்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லி விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அடுத்த வாரமளவில் அவர் இலங்கைக்கு பயணிப்பார் என்பதை தெரிவித்த தூதுவர் மஹிந்த சமரசிங்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட போது, கடந்த மாதம் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதுடன், தற்போது அவர் ஜனாதிபதியாக கடமைப்பொறுப்பேற்றுள்ள நிலையில் எனக்கு விடுத்த பணிப்பிற்கு அமைய டேவிட் பீஸ்லியை சந்தித்து கலந்துரையாடினேன் எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் அடுத்து வரும் காலங்களில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் நிலையொன்று காணப்படுகின்றது. ஆகவே உலக உணவு திட்டத்தின் வேலைத்திட்டங்களின் கீழ் இலங்கைக்கான உதவிகளை பெற்றுக்கொள்வது குறித்தும், ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களுடன் எதிர்காலத்தில் பயணிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடியிருந்தோம். உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லி இதற்கான ஆரோக்கியமான பதிலை எமக்கு வழங்கியுள்ளார். உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு விரைவில் நிவாரண உதவிகள் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இறுதிப்பக்கங்களை ரணிலே எழுதுவார்




முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி, இலங்கையின் இறுதிப்பக்கங்களை ரணில் எழுதுவார் என்ற அச்சம் எம்மத்தியில் உள்ளது என்றார்.

கொழும்பில் நேற்று (21) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவற்றை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ரணிலுக்கு தேசிய அங்கிகாரமும் இல்லை, சர்வதேச அங்கிகாரமும் இல்லை. அவ்வாறான ஒருவரால் நாட்டின் நெருக்கடியை தீர்க்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரம் நம்பி எதனையும் செய்ய முடியாது. சர்வதேச நாணய நிதியம் ஒரு சிறிய நிவாரணம் மட்டுமேயாகும் என்றார்.

ஆகவே, வெகு விரைவில் நாடு மோசமாக பாதிக்கப்படும், சமூக அமைதியின்மை ஏற்படும், இதனை கட்டுப்படுத்த மோசமான அடக்குமுறை கையாளப்படும். ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படை இங்கு வரும், இந்தியாவின் தலையீடுகளும் ஏற்படும். மக்களின் போராட்டம் வெடிக்கும் என்றார்.

# "கோ ஹோம் ரணில்" பூங்காவில் இடம்



பாராளுமன்றத்தில் நேற்று (21) நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார் என, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்தார்.

# பதவிப்பிரமாண நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதா?

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஜனாதிபதியாக பிரதம நீதியரசர் முன்னிலையில் நேற்று (21) பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டார்.

ஜனாதிபதி பதவியேற்கும் நிகழ்வை தேசிய ரூபவாஹினி உள்ளிட்ட அரச தொலைக்காட்சிகள் அஞ்சல் செய்துகொண்டிருந்தன. எனினும் திடீரென இந்த நேரடி ஒளிபரப்பு தடைப்பட்டு 10 நிமிடங்களின் பின்னர் மீண்டும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடைக் காரணமாகவே அஞ்சல் தடைப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாராளுமன்றத்தில் மின்சாரம் தடைப்படுமாயின், சுமார் 2 நிமிடங்களில் ஜெனரேட்டர்கள் இயக்கப்பட்டு மின் துண்டிப்பு சரி செய்யப்படுவதே வழமையாகும். எனினும் ஜனாதிபதி பதவியேற்கும் போது சுமார் 10 நிமிடங்கள் வரையில் பாராளுமன்றத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இதனாலேயே தேசிய ரூபவாஹினிக்கு நேரடி ஒளிபரப்பை செய்வதில் சிக்கல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனை உறுதி செய்வதற்காக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோவை வினவியபோது, ஜனாதிபதி பதவி ஏற்கும் நிகழ்வில் மின் துண்டிப்புகள் இடம்பெறவில்லை என தமிழ்மிரருக்கு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜெனரேட்டர்களே தற்போது இயங்கி வருகின்றன. எனவே பாராளுமன்றத்தில் மின் துண்டிப்புகள் இடம்பெறவில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். எனினும் இது தொடர்பில் சி.ஐ.டி விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறதா? என்பது தொடர்பில் தனக்குத் தெரியாது என்றார்.





© Parliament of Sri Lanka

# ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்பு





இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நேற்று (21) பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார். பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முதற்பெண்மணி பேராசிரியர் மைத்திரி விக்ரசிங்க உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஜனாதிபதி பதவி வெற்றிடத்துக்கு அடுத்துவரும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் இரகசிய வாக்கெடுப்பு நேற்று முன்தினம் (20) நடைபெற்றதுடன், இதில் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றியிருந்த ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகளைப் பெற்று அடுத்துவரும் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.





© Parliament of Sri Lanka



ரணில் ஜனாதிபதியாகுவதற்கு

# போராட்டக்காரர்களின் முட்டாள்தனமே காரணம்

■ பா.நிரோஸ்



போராட்டக்காரர்களின் முட்டாள் தனமான செய ற்பாடுகளும், தூரநோக்கு இல்லாத போராட்டமும் தேசிய பட்டியலில் ஒருவராக வந்தவருக்கு 134 பேரின் ஆதரவு கிடைத்து ஜனாதிபதியாக காரணமாக அமைந்துள்ளது. இனிமேல் ஜனாதிபதி ரணிலின் பார்வை காலி முகத்திடல் பக்கமே இருக்கும். தன்னை ஆட்சிக்கு கொண்டுவந்த போராட்டக்காரர்களை அவர் சிறப்பாக கவனிப்பார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (21) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவற்றை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

போராட்டத்தின் மூலமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியதாகவே ஒரு சிலர் கூறிக்கொண்டுள்ளனர். அவர்களின் நிலைப்பாட்டுக்கு அமைய மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்ற கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டிவிட்டு, மக்களால் தோற்கடிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆசனத்தில் அமரவைத்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி நீக்கக்கூடாது, அவரை முன்னிறுத்திய தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைக்க வேண்டும். மாறாக அவரையும் விரட்டியடித்தால் அடுத்ததாக நாடு பாரிய நெருக்கடிக்குள் சிக்கும் என்று ஆரம்பத்தில் இருந்தே நாம் கூறி வந்தோம். ஆனால், இந்த ஆழமான நிலைப்பாடுகளை விளங்கிக்கொள்ளாத அளவிற்கு இளம் போராட்டக்காரர்களுக்கு சுய சிந்தனையும், புத்தியும் இருக்கவில்லை என்பதே உண்மையாகும் என்றார்.

போராட்டக்காரர்கள் தனது மாளிகையை சுற்றிவளைத்த போது துப்பாக்கி சூடு பிரயோகிக்க வேண்டாமென கட்டளையிட்ட ஜனாதிபதியை விரட்டிவிட்டு, போராட்டக்காரர்களை தாக்க தயாராக உள்ள ஒருவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர். தெளிவான சிந்தனையும், கொள்கையும், தூரநோக்கி திட்டமும், தலைமைத்துவமும் இல்லாத போராட்டத்தின் விளைவாக போராட்டக்காரர்களால் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் பெரும்பான்மையில் ஜனாதிபதியாகியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உள்ள குழப்பகரமான மனநிலையே ரணிலை ஆதரிக்க காரணமாக அமைந்துள்ளது. தமக்கு பாதுகாப்பு இல்லை, தாக்கப்படுகின்றோம், ஆகவே இதனை நிறுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு ரணிலை தெரிவு செய்துள்ளனர். இந்த மனநிலையை உருவாக்கியதும் போராட்டக்காரர்கள் என்றார்.

தேசிய பட்டியலில் ஒருவராக வந்தவருக்கு 134 பேரின் ஆதரவு எவ்வாறு கிடைத்தது? போராட்டக்காரர்களின் முட்டாள் தனமான செயற்பாடுகளே இதற்கும் காரணமாகும். இனியும் போராடி சட்டத்திற்கு மாறாக எதனையும் செய்ய முடியாது, ஜனாதிபதி ரணிலின் முதல் பார்வை காலி முகத்திடல் பக்கமே இருக்கும். தன்னை ஆட்சிக்கு கொண்டுவந்த போராட்டக்காரர்களை அவர் சிறப்பாக கவனிப்பார் என நம்ப முடியும் என்றார்.



ஐ.தே.கவினரால்

# யாழில் வெற்றி கொண்டாட்டம்



■ வி.நிதர்ஷன்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாண நகரில் வெடி கொழுத்தி வெற்றிக் கொண்டாட்டங்களில் நேற்று (21) ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதையடுத்து, யாழ். நகரின் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளைக்கொழுத்தி, மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டனர்.

# எம்.பி பதவியை துறந்தார் ரணில்

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடம் தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இந்நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், இதனால் 2022 ஜூலை 21ஆம் திகதி முதல் அதாவது இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் ரணில் விக்ரமசிங்க கடிதம் மூலம் தனக்கு அறிவித்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 66 (இ) உறுப்புரையின் பிரகாரம் ஒன்பதாவது பாராளுமன்றத்தில், உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதனால் 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) பிரிவின் கீழ் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

# தீர்ப்பைத் திரும்ப பெற நீதிமன்றத்தை நாடுவோம்



■ பா.நிரோஸ்

காலி முகத்திடலில் உள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் உருவச் சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்துக்கு உள்நுழைய தடை விதித்து கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (20) உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் இந்தத் தீர்ப்பை திரும்பிப்பெற வேண்டுமென கோட்டை நீதவான் நீதிமன்றத்திடம் இன்று (21) கோரிக்கை ஒன்று முன்வைக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் என்பவற்றைக் கைப்பற்றியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளமை தொடர்பிலும் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி நுவான் போபகே, இவற்றைப் போராட்டங்களின் ஊடாகப் பொதுமக்களே கைப்பற்றினர். இதனால் நாட்டில் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. எனினும் இவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான இயலுமை இருந்தாலும் அவற்றை செய்ய வேண்டாமென்றே நாம் கோருவோம் என்றார்.

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர். டி பண்டாரநாயக்கவின் உருவச் சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்துக்கு உள்நுழைய நீதிமன்றம் தடை உத்தரவு விதித்துள்ளதாலேயே காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இருந்து செஞ்சிலுவை சங்கம் வெளியேறியுள்ளதாகவும், இந்த நீதிமன்ற தடை உத்தரவு நீக்கிக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் செஞ்சிலுவை சங்கத்தின் உதவிகள் மீள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

# புதிய ஜனாதிபதியுடன் பணியாற்ற தயார்



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை வெற்றிகொள்ள, புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற தாம் எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சவால் மிகுந்த காலங்களில், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு காண்பதற்கும், ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் உறுதியானதும், பாதுகாப்பானதுமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கும் அனைத்து தரப்பினரும் தங்கள் முயற்சிகளை இரட்டிப்பாக்குவது அவசியமானதாகும் எனவும் அவர் தனது உத்தியோகப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி தெரிவு; தாய்நாட்டின் கீர்த்தியை

# சர்வதேசத்தில் உயர்த்தியுள்ளது

**ஏ.எச்.ஏ. ஹுஸைன், வ.சக்தி, எம்.எஸ்.எம் நூர்தீன், எம்.எஸ்.எம்.ஹனீபா**

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் 60 சதவீதமானோரின் ஆதரவைப் பெற்று புதிய ஜனாதிபதி தெரிவாகியிருப்பது, தாய்நாட்டின் கீர்த்தியை சர்வதேசத்தில் உயர்த்தியிருப்பதாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதியாக ரணில்விக்ரமசிங்க தெரிவானமை தொடர்பில் அவர் தெரிவித்துள்ள வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளதாவது;

“தேவையான நேரத்தில் தகுதியான ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். பல இனங்களையும் பெரும்பாலான கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுதத்தும் எம்.பிக்களது ஆதரவும் அவருக்குக் கிடைத்துள்ள து.

“ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகவே, இதை, நான் பார்க்கிறேன். படுகுழிக்குச் சென்றுள்ள நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்த சர்வதேசத்தின் உதவிகளே தேவைப்படுகிறன.

“இந்த நேரத்தில் ரணிலை ஜனாதிபதியாக பாராளுமன்றம் தெரிந்திருப்பது, தீர்க்க தரிசினமிக்க செயலாகும். சர்வதேசத்தில், புதிய ஜனாதிபதிக்குள்ள கீர்த்தியாலும், ஜனநாயகத்தில் ரணில் வைத்துள்ள நம்பிக்கையாலும் இந்த உதவிகளைப் பெறமுடியும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.





மட்டக்களப்பில்

## ஐ.தே.கவினர் கொண்டாட்டம்

■ க.விஜயரெத்தினம்

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக கடைமையை பொறுப்பேற்றதையொட்டி, ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மற்றும் முகாமையாளர் தலைமையிலான குழுவினர், நேற்று (21) பட்டாசு கொழுத்தியும் குளிர்பினம் வழங்கியும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.தே.கவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வீ.கே. லிங்கராசா மற்றும் கட்சியின் மாவட்ட முகாமையாளர் எல். பிரதாப் தலைமையிலான குழுவினரே இவ்வாறு மட்டக்களப்பு நகரில் பட்டாசு கொழுத்தி, மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

ஆரையம்பதி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.மகேந்திரலிங்கம், மட்டக்களப்பு மாநகர சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களான ரீ.சிவலிங்கம் மற்றும் பீ.சுரேஸ்குமார் ஆகியோர்கள் இதன்போது உடனிருந்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அமைப்பாளரும், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான திருமதி சசிகலா விஜயதேவா, தனது இல்லத்தின் வாயிலில் ஜனாதிபதிக்கான வாழ்த்துப் பதாதை தொங்கவிட்டு, வீதியில் பயணிக்கும் பொதுமக்களுக்கு குளிர்பானம் வழங்கினார்.



## 25ஆவது வருட நினைவு துஆ பிரார்த்தனை

■ ஹஸ்பர், தீஷான் அஹமட்

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் துறைமுகங்கள் கப்பல் துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான காலம் சென்ற எம்.ஈ.எச்.எம்.மஹரூபின் 25ஆவது வருட நினைவு தின நிகழ்வும், துஆ பிரார்த்தனையும், கிண்ணியா குறிஞ்சாக்கேணி தாருல் உலூம் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று (21) நடைபெற்றது.

> **எம்.ஈ.எச்.மஹரூப் , 1997.07.20ஆம் திகதி நிலாவெளி பகுதியில் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் இன்னும் நால்வரும் படுகொலை செய்யப்பட்டனர்.**

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், இம்ரான் மஹரூபின் ஆலோசனைகளுக்கு அமைய, இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் முன்னாள் நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம், கிண்ணியா மீனவர் சமாஜத்தின் தலைவர் எம்.பாயிஸ், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூபின் பிரத்தியேகச் செயலாளர் சதாத் கரீம் மற்றும் மௌலவிமார்கள் பலர் கலந்துகொண்டனர்.

எம்.ஈ.எச்.மஹரூப் , 1997.07.20ஆம் திகதி நிலாவெளி பகுதியில் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் இன்னும் நால்வரும் படுகொலை செய்யப்பட்டனர்.

புதிய அமைச்சரவையில்

## ஹிஸ்புல்லாவை உள்வாங்கவும்

■ நூருல் ஹுதா உமர்

புதிய அமைச்சரவையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏம் ஏ.ஹிஸ்புல்லா உள்வாங்கப்பட்டு, பலம்பொருந்திய அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டுமென அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா மத்தியகுழு அறிக்கையொன்றினூடாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொண்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“நாட்டில் உள்ள நெருக்கடிகளை தீர்ப்பதற்கு அரபு நாடுகளில் இருந்து இலங்கைக்கு பல கோடி ரூபாய் உதவித் திட்டங்களை பெற்றுக் கொள்வதற்கு ஹிஸ்புல்லாவை மீண்டும் தேசியப்பட்டியலூடாக பாராளுமன்றத்துக்கு உள்வாங்கி ,முக்கிய அமைச்சர் பதவியில் அமர்த்த வேண்டும்.

“அப்படிச் செய்தால், நாட்டுக்கு பல கோடி ரூபாய் பணங்களை அரபு நாடுகளில் இருந்தும் ஏனைய நட்பு நாடுகளிடமிருந்தும் உதவியாக பெற்றுக்கொள்ள முடியும்.

“தான் அரசியல் அதிகாரத்திலிருந்த காலங்களில் ஹிஸ்புல்லா பல கோடிக்கணக்கான பணங்களை இலங்கை நாட்டுக்கு உதவியாக பெற்று, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் தனது சேவையை வழங்கியுள்ளார்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையால் உருவாக்கப்பட்ட “காவல் படை”யின்

# சீருடை விவகாரத்துக்கு நீதிமன்று முற்றுப்புள்ளி

**மேயர் விடுவிப்பு, காவல் படை மீண்டும் இயங்கும்**

■ டி.விஜித்தா, எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்



யாழ்.மாநகர சபையால் உருவாக்கப்பட்ட “காவல் படை” தொடர்பிலான வழக்கில் இருந்து , யாழ்.மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், காவல் படையின் சீருடைகளையும் மீள கையளிக்குமாறு, நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் , யாழ்.மாநகர சபையினரால் காவல் படை உருவாக்கப்பட்டது. யாழ்.மாநகர சுகாதாரத்தை மேம்படுத்துதல், குப்பைகளை பொது இடங்களில் வீசுவார்கள் மற்றும் துப்புவோர்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிராக அபராதம் விதித்தல், தேவைப்படின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவே காவல் படை உருவாக்கப்பட்டது.

குறித்த காவல் படையின் சீருடையானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்தது என பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

காவல் படையை சேர்ந்தவர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் , தொடர்ந்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனிடமும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனை தொடர்ந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு யாழ்.மாநகர சபை மேயர் மணிவண்ணனை அழைத்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினர், மேயரை கைது செய்து, மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா அழைத்துச் சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் மறுநாள், யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் மேயர் முற்படுத்தியதை அடுத்து , நீதிமன்றால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், குறித்த வழக்கு நேற்று முன்தினம் (20) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் மன்றுக்கு அறிவித்தமையை அடுத்து, வழக்கில் இருந்து யாழ். மாநகர மேயர் விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன், சான்று பொருட்களாக மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சீருடைகளையும் மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

இதேவேளை, காவல் படை என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்துக்காக மீள செயற்படுமென மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

## ரூ.04 இலட்சத்துடன் குடும்பஸ்தர் கைது



■ க.அகரன்

வவுனியாவில் 04 இலட்சம் ரூபாய் பணத்துடன் குடும்பஸ்தர் ஒருவர், நேற்று (21) கைது செய்யப்பட்டுள்ளார் என சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சிதம்பரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு, அங்கிருந்த 04 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகரால், சிதம்பரபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாடு தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிரோசன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சிதம்பரபுரம் பகுதியில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், திருடப்பட்ட 04 இலட்சம் ரூபாய் பணமும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின் குறித்த நபரை, நீதிமன்றில முற்படுத்த சிதம்பரபுரம் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியாவில்

## சிறுவனை காணவில்லை; தகவல் தரவும்



■ க.அகரன்

வவுனியாவில் 15 வயதுச் சிறுவனை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


வவுனியா, தேக்கவத்தை, ஆலடி சந்தியை சேர்ந்த ஜசோதரன் கிஷால் என்ற சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்று முன்தினம் (20) காலை வீட்டிலிருந்து வெளியே சென்ற சிறுவன், இரவாகியும் வீடு திரும்பாததால் சந்தேகமுற்ற சிறுவனின் பெற்றோர், வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்து, தேடி வருகின்றனர். சிறுவன் தொடர்பில் தகவல் ஏதும் அறிந்தால், சிறுவனின் தந்தையான ஜசோதரனின் 077 559 9709 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்த

## இராமேஸ்வரம் மீனவர்கள் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஒரு படகையும், அதிலிருந்த 6 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து, தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தலைமன்னாருக்கும்-நாச்சிகுடா வுக்கும் இடையே மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது, அப்பகுதியில் நேற்று முன்தினம் (20) ரோந்துக் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இரண்டு படகையும் அதில் இருந்த 11 மீனவர்களையும் கைது செய்தனர்.

இதில் ஒரு படகையும் அதிலிருந்து ஐந்து மீனவர்களும் இயந்திர கோளாறு காரணமாக, காற்றின் வேகத்தால் எல்லை தாண்டி வந்ததாக மீனவர் தெரிவித்ததையடுத்து, படகை சோதனை செய்த இலங்கைக் கடற்படையினர் இயந்திர கோளாறு உறுதி செய்யப்பட்டதையடுத்து, அந்த படகையும் அதிலிருந்து 5 மீனவர்களையும் தமிழகத்துக்கு திருப்பி அனுப்பினர். ஏனைய 6 பேரையும் கைதுசெய்தனர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமென இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க மீனவர்கள், மத்திய, மாநில அரசுகள் ஊடக இலங்கை அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

இலஞ்சம் பெற்ற அச்சுவேலி பொலிஸ் நிலைய

## பொறுப்பதிகாரிக்கு உடனடி இடமாற்றம்

■ செந்தூரன் பிரதீபன்

உடன் நடைமுறைக்கு வரும் வகையில், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் சுமுது பிரசன்ன, எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிராந்தியத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அவர் மீது தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த முறைப்பாடுகளை அடுத்து இந்த இடமாற்றம் பொலிஸ் பொலிஸ் மா அதிபரால் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவி நிலையிலிருந்து தரமிறக்கப்பட்டே, இடமாற்றப்பட்டுள்ளார்.



ஒரு சிலரை வைத்து கொண்டு கையூட்டுப் பெறல், சட்டவிரோத மணல் - கல் வியாபாரிகளிடமிருந்து கையூட்டு பெற்று வந்தமை மற்றும் முறைப்பாடுகளை தட்டிக்கழித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே, பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் நீண்டகாலமாக பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை இடம்மாற்றி, புதிய உத்தியோர்களை உள்வாங்க யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதேவேளை, புதிய பொறுப்பதிகாரியாக காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இருந்து ஒருவர் நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# திறன் வகுப்பறை திறந்து வைப்பு


நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட காரலிபேக் தமிழ் வித்தியால பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை ஒன்றை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு (20) வன்னி ஹோப் நிறுவன தலைவர் ரஞ்சன் சிவஞான சுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

லக்ஷ்மன யர் சசிதரன் குடும்பம் மற்றும் ஐக்கிய இராஜியத்தில் இயங்கும் இரட்ணம் பவுன்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில், வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை ஊடாக இந்த வகுப்பறை நிர்மாணிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஞ்சன் சிவஞானசுந்தரம், வைத்தியர் மாலதி வரன் , நுவரெலியா கல்வி வலய மேலதிக பணிப்பாளர் மோகன்ராஜ், பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் என்.முரளிதரன்,பாடசாலையின் அதிபர் சவரிமுத்து, நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி பணிப்பாளர் செல்வராஜ், கோட்டக் கல்வி பணிப்பாளர் கிருபாகரன், உதவி கல்விப் பணிப்பாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். ( பி.கேதீஸ்)









# முற்றிலும் தவறானது

“குழந்தைக்கு கடும் எதிர்ப்பு” எனும் தலைப்பில், கடந்த 14 ஆம் திகதியன்று எமது மின்னிதழில் வெளியான செய்தித் தொடர்பில், நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் கே.கே. ரவி, தன்னிலை விளக்கமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த விளக்கத்தில், இந்த செய்தி முற்றிலும் தவறானது என்பதுடன் அதன் ஊடாக எமது பிரதேச சபைக்கும் எனக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மற்றும் என்னால் எந்தவிதமான இடங்களும் கையகப்படுத்தப்படவில்லை. என்பதுடன், எனக்கு குறித்த கடைத்தொகுதியை அமைக்கும் நோக்கமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வூட் பிரதேச சபையின் தலைவராக எனது கடமைகளை செய்வதோடு எனது பணியை துஷ்பிரயோகம் செய்து தேயிலைத் தோட்டக்காணிகளை கையகப்படுத்தி, ஏதாவது கடைகளையோ, இடத்தையோ சொந்தமாக்கி கொள்ள எவ்விதமான எவ்விதமான தேவைப்பாடும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தங்களால் குறிப்பிட்டுள்ள செய்தியில் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாக கூறப்பட்டுள்ளது. எனினும், எவ்விதமான ஆர்ப்பாட்டமும் இடம்பெறவில்லை. இவ்வாறான தவறான செய்திகள் ஊடாக எமது அரசியல் பயணத்துக்கு தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அந்த விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



### மரணத்தில் சந்தேகம்

## 9 மாதங்களின் பின்னர் தோண்டி எடுக்கப்பட்ட சடலம்

மொஹொமட் ஆஸிக்

வீட்டில் விழுந்து உயிரிழந்ததாகக் கூறி புதைக்கப்பட்ட பெண் ஒருவரின் சடலம் ஒன்பது மாதங்களுக்கு பின் மீண்டும் நேற்றுமுன்தினம் ( 20) மாலை தோண்டி எடுக்கப்பட்டது.

வத்துகாமம் -கண்டி வீதியில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 54 வயதுடைய பெண்ணின் மரணம், சந்தேகத்திற்குரியது என பொலிஸாருக்கு கிடைத்த அநாமதேய கடிதம் ஒன்றின் பிரகாரம் இச் சடலம் மீண்டும்தோண்டி எடுக்கப்பட்டது.

தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் பெறப்பட்ட உத்தரவின் பிரகாரமே இச் சடலம்தோண்டி எடுக்கப்பட்டது.

யடிராவன பகுதியைச் இவர், 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி தனது வீட்டில் விழுந்து கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் ஏற்கெனவே உயிரிழந்திருந்தார்.

அப்போது மரணத்தில் சந்தேகம் ஏதும் இல்லாததால், சடலம் ஒப்படைக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 16 ஆம் திகதி பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இருப்பினும், 2021 நவம்பர் இரண்டாம் திகதி , ஒருவர் அநாமதேய கடிதம் மூலம் மரணம் சந்தேகத்திற்குரியது என்று பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தினால் பெறப்பட்ட உத்தரவின் பிரகாரம் சடலம் மீண்டும் பிரேத பரிசோதனைக்காக 20ஆம் திகதி மாலை தோண்டி எடுக்கப்பட்டது.

தெல்தெனிய பதில் நீதவான் சரத் பிரேமகுமார மற்றும் கண்டி சட்ட வைத்திய அதிகாரி சமீர குணசேகர மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் குற்றப் புலனாய்வு அதிகாரிகள், உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் ஆகியோர் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.’

.மீண்டும்தோண்டி எடுக்கப்பட்ட சடலம் தெல்தெனிய பதில் நீதவானின் உத்தரவுக்கமைய பிரேத பரிசோதனைக்காக கண்டி பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்



ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்டத்தில் கிராமிய மட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 500 உணவு இருப்பு வேலைத்திட்டத்துக்கு அமைவாக கொத்மலை பிரதேச செயலகப் பிரிவில் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில், கொத்மலை-திஸ்பனை உப அலுவலக வளாகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலகம் ஊடாக மேற்கொள்ளப்படும் குறித்த வேலைத்திட்டத்தின் கீழ், உலர் உணவுப் பொருள்கள், நீண்ட நாள் பாதுகாத்து வைக்கக் கூடிய உணவுப்பொருள்கள், விதைகள், கன்றுகள் பரிமாற்றம், வீட்டுத்தோட்டம், சந்தை, குறைந்த செலவில் போசனை உணவை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

### ஹட்டனில் கடைசி இலக்கங்களுக்கு

## எரிபொருள் விநியோகிக்கப்பட்டது

ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் நகரில் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு சில வாரங்களுக்கு பின்னர் நேற்று (21) டீசல் மற்றும் பெட்ரோல் விநியோகிக்கப்பட்டது.

கொட்டகலை எரிபொருள் கூட்டுதாபன களஞ்சியசாலை ஊடாக இந்த எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்பட்டதுடன், இதன்போது 6600 லீற்றர் பெட்ரோல், 6600 லீற்றர் டீசல் விநியோகிக்கப்பட்டது.

வாகன இலக்கத் தகடின் இறுதி இலக்கங்களான 3, 4, 5 ஆகிய இலக்கங்களையுடைய வாகனங்களுக்கு மட்டுப்பாடுகளுடன் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஏனைய வாகனங்களுக்கு நேற்று (21) எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என்பதுடன், அந்தந்த இலக்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட தினங்களில் மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று, எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தெரிவித்தனர்.









## பட்டாசு கொளுத்தினர்

இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று (21) பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நிலையில், மலையகத்தின் பல இடங்களிலும் பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பதுளை, பொகவந்தலாவை, ஹட்டன், கம்பளை உள்ளிட்ட பல இடங்களில் மக்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தனர்.
(பாலித ஆரியவன்ஸ, எஸ்.யோகா, ரஞ்சித் ராஜபக்ஷ)

# கைகளை கட்டிப்போடவோ, கடித்தோ விடக்கூடாது

புதிய ஜனாதிபதியாக மக்கள் பிரதிநிதிகளால் தெரிவுச் செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, வாக்கெடுப்பு நடத்தப்பட்ட ஜூலை 20 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களை பெயர்கூப்பிட்டு விளித்து, “அனைவரும் வாருங்கள், ஆதரவைத் தாருங்கள்’ என அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கிடையே சர்வக்கட்சி அரசாங்கமொன்றி தேவையை, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகின்றனர். வாக்கெடுப்பு நிறைவடைந்தன் பின்னர், கொழும்பு-02 கங்காராமை விஹாரையில் வழிபாடுகளை முடித்துக்கொண்டு, ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் கட்சியே பிரதமர் பதவியை தீர்மானிக்கும்” என்றார்.

இந்நிலையில், புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை இன்று (22) காலை பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று (21) மாலையே அறிவித்திருந்தது. அப்படியானால், தேசிய அரசாங்கம் என்பது ஒரு பேச்சுக்கு மட்டுமேயாகும் என்பதே புலனாகிறது. தேசிய அரசாங்கம் என்ற கதை, காலத்தை கடத்திச்செல்வதற்காக ஒரு பாலமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும் அம்பலமானது.

நாடு முகங்கொடுத்திருக்கும் படுமோசமான பிரச்சினைகளுக்கு மத்தியில்,ஓரணியில் திரண்டு செல்லவேண்டும். “அனைவரும் வாருங்கள், ஆதரவைத் தாருங்கள்” அழைத்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தினாரா? அப்படியாயின் ஓரிரு இரவுக்குள் தீர்மானங்களை எட்டமுடியுமா? ஆக, அழைப்பு மட்டுமே விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே அமைச்சரவைக்குள் நியமிக்கப்படுபவர்கள் சுதந்திரமான தீர்மானங்களை எடுக்கும் வகையிலான சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். அமைச்சுகளைக் கொடுத்துவிட்டு, முக்கியமான நிறுவனங்களையும் திணைக்களங்களையும் தம்வசம் வைத்துக்கொள்வதற்கு முயற்சிக்கக்கூடாது. அது அமைச்சர்களின் கைகளை கட்டிப்போடும் செயற்பாடாகும்.

கடந்தகால தவறுகளால், பல அமைச்சர்கள் அதிருப்தி கொண்டிருந்தனர் என்பதையும், அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்துவைத்துக்கொண்டு அதிகாரத்தோரணையை காட்டுவதற்கு இது நேரமல்ல.

அதேபோல், நேரத்தைம் அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்துவிடக்கூடாது. இவ்வாறான செயற்பாடுகள், நாட்டை இன்னுமின்னும் அதாள பாதாளத்துக்குள் தள்ளிவிட்டுவிடும் என்பதே யதார்த்தமாகும்.

எதிர்கட்சியினர், எதிர்க்கவேண்டிய இடங்களில் எதிர்த்தும், ஆலோசனைகள் வழங்கவேண்டிய நேரங்களில் ஆலோசனைகளைக் கூறியும், நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டுச் செல்வதற்கான வழிகளை காண்பித்தும், அரசாங்கத்தை சரியான வழியில் கொண்டுச் செல்லவேண்டும். எதிர்ப்பு அரசியல் இருக்கவே வேண்டும். எதற்கெடுத்தாலும் எதிர்க்கக்கூடாது.

அரசியல் ஸ்திரத்தன்மையையே சர்வதேசமும், சர்வதேச அமைப்புகளும் எதிர்பார்த்து காத்திருக்கின்றன. அதனூடாகவே நாட்டுக்குத் தேவையான கடன்கள் மற்றும் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நினைவில் கொண்டு பயணங்களை தொடரவேண்டியதே அரசாங்கத்தின் முன்னிருக்கும் தார்மீக பொறுப்பாகுமென நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கபூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிபாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

# நட்டாற்றில் நாடு: அடுத்தது என்ன?

இலங்கை அரசியல் எனும் சூதாட்ட அரங்கின் புதியதோர் அத்தியாயம் கடந்த புதன்கிழமை அரங்கேறி இலங்கைக்கான புதிய ஜனாதிபதியைத் தெரிந்ததனூடு தொடங்கியது. நூறு நாட்களுக்கு மேலாகப் போராடுகின்ற போராட்டக்காரர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் எட்டமுடியாத இடைவெளி உள்ளதை கடந்த ஒருவாரகால நடத்தைகள் மீண்டுமொருமுறை நிரூபித்தன.

கடந்த வார நிகழ்வுகள் போராட்டக்காரர்களுக்கு மட்டுமன்றி மிகச்சாதாரண இலங்கைக் குடிமகனுக்கும் சில முக்கியமான செய்திகளைச் சொல்லிச் சென்றுள்ளன. அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் தெரிவைத் தொடர்ந்து பகடைகள் உருளத் தொடங்கியுள்ளன. அவை இலங்கையை எத்திசையில் நகர்த்தும் என்ற வினா ஒருபுறமும் போராட்டக்காரர்களின் திசைவழிகள் எவை என்பது மறுபுறமுமாக மிகுந்த நெருக்கடியான கட்டத்தை நோக்கி இலங்கை நகர்கின்றது. இதுவரை நடந்தது ஓர் ஒத்திகை என்பது போல இனிவரும் காலங்களில் நிகழ்வுகள் அரங்கேறும் என்பதை மட்டும் உறுதியாகச் சொல்லவியலும்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதான அளவுகடந்த நம்பிக்கையும் விருப்பும் பெரும்பாலான இலங்கையர்களுக்கு உண்டு. ஆசியாவின் மிகப்பழைமையான ஜனநாயகம் என அறியப்பட்ட இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்திய அரசியல் வரலாற்றில் இரண்டு அம்சங்கள் மிகவும் முக்கியமானவை. முதலாவது, மிகுந்த நெருக்கடியான காலங்களிலும் இலங்கை எப்போதும் முழுமையான சர்வாதிகாரத்தை நோக்கியோ இராணுவ ஆட்சியை நோக்கியோ நகரவில்லை. மாறாக மென்மையான சர்வாதிகாரப் போக்குக்கு (ளழகவ யரவாழசவையசயைnளைஅ) நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாபதிப் பதவி வழியமைத்தபோதும் அது முழுமையான சர்வாதிகாரமாக முகிழ்க்கவில்லை. இரண்டாவது, அரசாங்கங்கள் மோசமான ஆட்சியை வழங்கியபோதும் மக்கள் தேர்தல் வரைப் பொறுமைகாத்து ஆட்சியாளர்களை மாற்றி வந்திருக்கிறார்கள். அவ்வகையில் தேர்தல்கள் என்பதே மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கும் களமாக இருந்துள்ள நிலையில் தேர்தல்களில் வாக்களிப்பது ‘ஜனநாயகக் கடமை’ என்ற பொதுப்புத்தி மனநிலை ஆழப் பதியவைக்கப்பட்டுள்ளது.

இவை இரண்டும் சில அடிப்படையான சிக்கல்களைத் தன்னகத்தே கொண்டிருந்தன. முதலாவது, பாராளுமன்ற ஜனநாயகத்தின் போர்வையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை கோலோட்சுகிறது. இதன்மூலம் நிறைவேற்று அதிகாரத்துக்கான ஜனநாயக அந்தஸ்து வழங்கப்பட்டது. இரண்டாவது, இந்த அந்தஸ்தானது நிறைவேற்று அதிகாரம் என்ற ‘ஜனநாயக முகமூடியின் கீழ்’ சர்வாதிகாரத்தின் பண்புகளை பயன்படுத்த அனுமதித்தது. மூன்றாவது, மக்களால் நேரடியாகத் தெரிவான ஜனாதிபதி என்ற வாதம், சட்டத்திற்குப் புறம்பானவராக, கேள்விகளுக்கு அப்பாற்பட்டவராகவும் செயற்படுவதற்கான அறஞ்சார் வாதத்தை முன்மொழிந்தது.

நான்காவது, தேர்தல்களே அனைத்துக்கும் தீர்வு என்ற முடிந்த முடிவுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் அரசியல் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் நடந்து கொண்டார்கள். இது தேர்தல்களில் பங்களிப்பாளர்களாகவும் ஏனைய நேரங்களில் பார்வையாளர்களாகவும் குடிமக்களை இயங்கக் கோரியது. ஐந்தாவது, தெரிவுசெய்த பிரதிநிதிகளிடம் அனைத்தும் ஒப்படைத்துவிடுவது என்பதனூடு ‘பாராளுமன்றின் மீஉயர் தன்மையை’ பாதுகாக்க அனைவருக்கும் கடப்பாடு உண்டு என்ற கருத்துநிலை பொதுமைப்படுத்தப்பட்டது.

இந்தச் சிக்கல்களின் தீவிரத்தை கடந்த மூன்றுமாத இலங்கை அரசியலின் போக்கு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையின் ஆபத்துக்களை அண்மைக்கால நடத்தைகள் வெளிப்படுத்தின. 1978ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது என். எம். பெரேரா கேட்ட கேள்வி: ‘ஒருவேளை ஒரு பைத்தியக்காரனின் கைகளுக்கு ஜனாதிபதிப் பதவி சென்றால்?’ அவ்வளவு இலகுவில் இக்கேள்வியைக் கடந்துவிட முடியாது. சோகம் யாதெனில் ஜனநாயகத்தின் பெயரால் இலங்கையர்கள் இதையும் அனுமதித்திருக்கிறார்கள்.

இதன் மிகப்பாதகமான விளைவுகளை கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேல் அனுபவித்த பிறகும் இந்த முறையை இல்லாதொழிப்பதில் நியாயமான அக்கறையை எந்தவொரு அரசியல்வாதியும் காட்டுவதில்லை. அந்தக் கதிரையில் எப்படியாவது அமர்ந்துவிட வேண்டும் என்பதே எல்லோருடைய அவாவாகவும் இருக்கிறது.

இரண்டாவது முறை ஜனாதிபதியாகலாம் என்ற மைத்திரிபால சிறிசேனவின் ஆசை இம்முறையை இல்லாமல் செய்வதைத் தடுத்தது. என்றாவது ஜனாதிபதியாகிவிடுவது என்ற ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க அனுமதிக்கவில்லை (நல்லகாலம் இல்லாதொழிக்கவில்லை என்று அவர் இப்போது மனதுக்குள் மகிழக்கூடும்). இப்போதும் பலர் ஜனாதிபதிக் கனவில் இருக்கிறார்கள். அந்தக் கதிரையின் வலிமையும் வசீகரமும் அத்தகையது. அது மிகப்பெரிய ஆபத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. ஜே.ஆர்;. ஜெயவர்தனவிற்குப் பிறகு அப்பதவியின் அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தியவர்கள் கிடையாது. அதை உருவாக்கியவர் என்றவகையில் அதன் சட்டரீதியான ஆழ அகலங்களை அவர் அறிந்திருந்தார்.

அதன் பின்னானவர்கள் அந்தப் பதவி வழங்குகின்ற அதிகாரத்தின் வழியே தம் பிடியை இறுக்கிக் கொண்டவர்களேயன்றி சட்டத்தின் இடுக்குகளைப் பயன்படுத்தி கேள்விகளிற்கு அப்பாற்பட்டு சட்டத்தின்வழி நின்று செயற்பட்டவர்கள் அல்லர். மாமனாரின் வழிமுறையை மருமகன் பின்பற்றினால் என்ன என்ற வினா இயல்பானது.

தேர்தல் காலங்களில் மட்டும் பங்காளர்களாகப் குடிமக்களைக் கருதுகின்ற அரசியல் பண்பாட்டின் ஆபத்துக்களை கடந்த சில தசாப்தங்களில் நாம் கண்டு வந்திருக்கின்றோம். இந்தப் பண்பாடே அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கமும் விரும்பியது. இந்த முறையே அரசியல்வாதிகளுக்கான பிரதான பாதுகாப்புக் கவசமாகியது. பாராளுமன்றுக்குத் தெரிவானால் ஐந்து ஆண்டுகளுக்கு எதுவுமே செய்யவியலாது என்ற உத்தரவாதம் தருகின்ற அதிகாரபோதையின் சேதத்தை கடந்த புதன்கிழமை தேர்தல்கள் வரை நாம் கண்டுள்ளோம்.

அண்மைய மக்கள் போராட்டங்களின் முக்கியமான பணி, தேர்தல்களுக்கு அப்பாற்பட்டு மக்களை அரசியலில் பங்கேற்பாளர்களாக மாற்றியமையாகும். கேள்வி கேட்கவும், எதிர்த்து நிற்கவும் போராடவும் துணிவுள்ள ஒரு சமூகத்தை இந்த மக்கள் போராட்டங்கள் உருவாக்கியுள்ளன. இது முக்கியமானது. அரசியல்வாதிகளை பொறுப்பாளியாக்குவது என்பது முக்கிய கதையாடலாக உருவாகியுள்ளது. இது மட்டுமே போதுமானதா, குறிப்பாக ஜனாதிபதித் தெரிவையொட்டி நிகழ்ந்தவை உணர்த்துகின்ற பாடங்கள் என்ன என்பதை நோக்கியாக வேண்டும்.

கோட்டாபாயவை வெளியேற்றுவதை நோக்காகக் கொண்ட போராட்டம் கருத்திலும் களத்திலும் விரிவடைய வேண்டும் என்பது நான் தொடர்ச்சியாக வலியுறுத்தியது. கடந்தவாரம் கோத்தபாய தனது பதவியை துறந்தமையானது மிக முக்கியமான வெற்றி. மக்கள் போராட்டத்திற்கும் நீண்ட நெடிய துயர்மிகுந்த போராட்டத்தின் முக்கிய மைல்கல் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மக்கள் சக்தியின் மகிமையை மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் உணர்த்திய நிகழ்வது.

ஆனால் அது முடிவல்ல. இது ஒரு இடைநிலைப்படி மட்டுமே. ஜனாதிபதியின் பதவிவிலகலைத் தொடர்ந்து ஏற்பட்ட மகிழ்ச்சியின் பின்னணியில் ‘பாராளுமன்றத்தைச் செயற்பட அனுமதியுங்கள்’, ‘பாராளுமன்றம் தனது ஜனநாயகக் கடமையை ஆற்றட்டும்’ என்ற குரல்கள் வலுப்பட்டன. இவை பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையின் அடிப்படையிலான குரல்கள். இந்தக் குரல்களின் பிரதிபலிப்புகளே ‘அரகலய’ வினரிடமிருந்தும் வந்தது.

அடுத்த ஜனாதிபதியைத் தெரிவதற்கான போட்டி தொடங்கிய நிலையில் வலுவான, தெளிவான அரசியல் நிலைப்பாடொன்றைப் போராட்டக்காரர்கள் எடுக்கத் தவறினார்கள். அவர்களது குறி ரணில் விக்கிரமசிங்க மீதே இருந்தது. போட்டியிடுவதாக அறிவித்த சஜித் பிரேமதாசவுடன் பேசினார்கள். டலஸ் அழகப்பெருமவை விமர்சிக்கவில்லை. போராட்டம் ஒருபுறம் பாராளுமன்றுக்கு அழுத்தம் தருவதாகவும் இன்னொருபுறம் எவ்வாறேனும் ரணில் ஜனாதிபதியாகாமல் பார்த்துக் கொள்வது என்று சுருங்கியது. இதன் பலன் யாதெனில் எந்தப் பாராளுமன்றத்தின் மீது அழுத்தங் கொடுப்பதன் ஊடு தாம் விரும்பிய பலனை அடைய நினைத்தார்களோ, அதே பாராளுமன்றமே ரணில் விக்கிரமசிங்கவை ஏக பெரும்பான்மையுடன் ஜனாதிபதியாகத் தெரிந்துள்ளது.

ஊழலும் அதிகாரவெறியும் துர்நடத்தையும் ஆழ ஊடுருவிப்போன இலங்கையின் அரசியல் பண்பாட்டில் மாற்றம் எளிதல்ல என்பது இன்னொருமுறை வெளியாகியுள்ளது. போராட்டக்காரர்கள் இப்போது ரணில் பதவிவிலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுத்துள்ளார்கள். இது குறுகிய அரசியல்பார்வையின் விளைவிலானது.

ஜனாதிபதியைத் தெரிவதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் போராட்டக்காரர்கள் தெளிவான ஒரு வேலைத்திட்டத்தை முன்வைத்திருக்க வேண்டும். அதிகாரத் துஷ்பிரயோகத்தில் சஜித்தும், டலசும் ரணிலுக்கு சளைத்தவர்கள் அல்லர். டலஸ் அல்லது சஜித் வந்தால் பரவாயில்லை என்று கருதும் கருத்துநிலை கோளாறானது. பாராளுமன்றத்திடம் பொறுப்பைக்

## கடிதங்கள்

### காட்டுப்பாதையில் குடிநீர் சிக்கல்

கதிர்காமம் பாத யாத்திரீகர்களுக்கு காட்டுப்பாதையில் இம்முறை குடிநீர் வழங்குவதில் சிக்க நிலை ஏற்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் பாதயாத்திரையில் இம்முறை பயணிக்கின்றனர். இந்நிலையில் குடிநீர் இல்லாத செய்தி இந்துக்கள் மத்தியில் கவலை கொள்ள வைத்திருக்கின்றது.

**இன்று (22) திறக்கப்படும் காட்டுப்பாதை ஊடாக பயணிக்கும் பாத யாத்திரீகர்ளுக்கு சீரான குடிநீர் விநியோகத்தை நிச்சயப்படுத்த வேண்டும்.**

உகந்தை ஆலயத்தில் இருந்து குமுக்கன் வரையான பிரதேசத்தில் பாணமைப்பற்று லாகுகல பிரதேச செயலகமும் குமுக்கன் ஆற்றில் இருந்து யால பிரதேசத்திற்கு திருக்கோயில் சிவதொண்டர் நிலையமும் யால ஆற்றில் இருந்து கதிர்காமம் வரை மொனராகலை செயலகமும் பொறுப்பாக்கப்பட்டு இருந்தது .

எனினும், ன்னியாசி மலையடி வாரத்திலேயே தங்கியிருந்த சுமார் 300 அடியார்கள் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே குடிநீரின்றி அந்த இரவை கழித்தனர். அங்குள்ள சுனையிலே உறைந்து போயிருந்த பச்சை நிற தண்ணீரை வடிகட்டி எடுத்து சிலர் அருந்தியதாகவும் கூறினர்.

இன்று (22) திறக்கப்படும் காட்டுப்பாதை ஊடாக பயணிக்கும் பாத யாத்திரீகர்ளுக்கு சீரான குடிநீர் விநியோகத்தை நிச்சயப்படுத்த வேண்டுமென இந்து அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன

சகா




## காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன்

# எயார்டெல் லங்கா கைகோர்ப்பு

Airtel Lanka, புதிய தலைமுறை தொழில்நுட்பவியலாளர்களின் தொழில்நுட்ப மற்றும் தனிப்பட்ட திறன்கள் பற்றிய அறிவை மேம்படுத்தி நிபுணத்துவமுடையவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அண்மையில் காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் (COT, Galle) கைகோர்த்துள்ளது.

இவ்வாறு கூட்டிணைந்ததன் மூலம், Airtel Lanka, COT, காலியிலுள்ள கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட தொகுதிகளைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒத்துழைப்புகளை வழங்கவுள்ளதுடன், அவர்களுக்கு புதிய கணினிகள் மற்றும் உபகரணங்களையும் வழங்கவுள்ளது. சிறந்த மற்றும் திறமையான இறுதி ஆண்டு மாணவர்களுக்கு 6-12 மாதங்கள் வரை ஊதியத்துடன் கூடிய Internship திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

"உலகெங்கிலும் உள்ள பல நாடுகளைப் போலவே, இலங்கையும் மோசமான பொருளாதார நிச்சயமற்ற காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளது. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை வெளிக்கொணருவதற்கும் அனைத்து கார்ப்பரேட் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணங்கள் இதுவாகும். இந்த நிலைமையில் இருந்து மீட்பதற்கு ஊக்குவிப்பதில் ICT மற்றும் தொலைத்தொடர்பு துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்." என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷிஷ் சந்திரா தெரிவித்துள்ளார்.

அஷிஷ் மேலும் தெரிவிக்கையில், "வெற்றிப்பெற, இலங்கையின் இளம் வயதினரைப் பயிற்றுவித்து, இந்தத் துறைகளில் அவர்கள் சிறந்து விளங்குவதற்குத் தேவையான அறிவுத் திறன் மற்றும் கருவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். இது இலங்கை முழுவதும் துரிதமான, பரவலாக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி, வேலை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றில் ஒரு புதிய முன்னுதாரணத்தை உருவாக்கும். காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் எங்களின் கூட்டு இந்த முக்கியமான பயணத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்." என கூறினார்.

Huawei போன்ற மூலோபாய வணிக பங்குதாரர்களுடன் எயார்டெல்லின் தற்போதைய உறவுகளை மேம்படுத்துவதன் மூலம், தரவுத் தொடர்பு, மைக்ரோவேவ் நிறுவல் மற்றும் வடிவமைப்பு மற்றும் BSS நெட்வொர்க்குகள் ஆகியவற்றில் மாணவர்களுக்கு நேரடி/தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்படும். மேலும், காலி COT பட்டதாரிகள், Airtel பொறியாளர்களின் வாழ்க்கைப் பாதை, தனிப்பட்ட பிராண்டை உருவாக்குதல், தனிப்பட்ட திறன்கள் பயிற்சி மற்றும் பெருநிறுவனத் துறையில் நுழைவதற்கான வாய்ப்புகள் பற்றிய பயிற்சி மற்றும் வழிகாட்டுதலைப் பெறுவார்கள். தொலைத்தொடர்பு சேவைத் துறையின் முக்கியமான செயல்பாட்டு அம்சங்களில் நேர்முகத் தேர்வு மற்றும் நடைமுறை அனுபவத்தைப் பெறுவதற்கான நடைமுறை ஆலோசனைகளைப் பெற மாளிகாவத்தையில் உள்ள Airtel Mobile Switching Centre (MSC)க்கு வருகை தரும் வாய்ப்புகளும் உள்ளன.

## தேசிய நீர் வழங்கல் சபைக்கு

# SLT-MOBITEL இனால் அழைப்பு நிலைய வசதி




SLT-MOBITEL, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. சகல மக்களுக்கும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கான அழைப்பு நிலைய வசதி இந்த உடன்படிக்கையினூடாக ஏற்படுத்தப்படும்.

இரத்மலானையிலுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வளாகத்தில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தவிசாளர் நிஷாந்த ரணதுங்க மற்றும் பொது முகாமையாளர் திலின விஜேதுங்க மற்றும் SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் பிரதம வர்த்தக மற்றும் மொத்த சேவைகள் அதிகாரி லக்மால் ஜயசிங்க ஆகியோர் கைச்சாத்திட்டனர். இரு நிறுவனங்களின் உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உடன்படிக்கையின் கீழ், SLT-MOBITEL இனால் பரிபூரண அழைப்பு நிலைய தீர்வு 1939 எனும் கட்டணமற்ற தொலைபேசி இலக்கத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சேவைகளை நாடும் மக்களுக்கு வழங்கும். நவீன தொழில்நுட்ப தீர்வினூடாக, வாடிக்கையாளர்களுக்கு தன்னியக்கமான சேவைகளையும், முகவர்களின் உதவிகளுடனான வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அழைப்பு நிலையம் WhatsApp மற்றும் smart Chatbot உடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், நுகர்வோருக்கு தமது தீர்வுகளை விரல்நுனிகளில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். SLT-MOBITEL தீர்வினால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு அதிகளவு சௌகரியமான சேவை மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதிகளை சகல சகல மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த புதிய பங்காண்மை தொடர்பாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தவிசாளர் நிஷாந்த ரணதுங்க கருத்துத் தெரிவிக்கையில், "தேசம் எனும் வகையில், நுகர்வோரின் கேள்விகளில் நாம் மாற்றத்தை அவதானிப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு முன்னேற்றகரமான நாளிகை தேவையாக அமைந்திருப்பதுடன், அவர்களுடனான உறவுகளை பேண வேண்டியும் உள்ளது. அழைப்பு நிலைய தீர்வை பெற்றுக் கொள்வதற்காக தொழில்நுட்ப புத்தாக்கங்களில் முன்னோடியாக அமைந்துள்ள SLT-MOBITEL உடன் நாம் கைகோர்த்திருந்ததுடன், நவீன வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையை திகழச் செய்வதற்கு அதிகளவு சௌகரியம் மற்றும் வினைத்திறனானதாக அமைந்திருக்கச் செய்யும்." என்றார்.

SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டுக்கு நீர் முகாமைத்துவம் மற்றும் தூய்மை தொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆற்றும் பங்களிப்பை நாம் வரவேற்கின்றோம். SLT-MOBITEL இன் தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அழைப்பு நிலைய அறிவைப் பயன்படுத்தி, நீர் வழங்கல் சபைக்கு முதல் தர அழைப்பு நிலைய தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கான வசதி, சேவை வழங்கும் தரத்தை மேம்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை தக்க வைத்துக் கொள்வதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது." என்றார்.

சென்னை,

# மாமியார் மன்னித்ததால் மருமகன் விடுதலை



மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான சேலம் ஆத்தூரை சேர்ந்தவருக்கும் அவரது மனைவிக்கும், கடனை திரும்ப செலுத்துவது தொடர்பாக 2017 டிசெம்பர் 28ஆம் திகதியன்று வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது, ஏற்பட்ட கோபத்தில் அங்கிருந்த மாமியாரை அரிவாளால் அவர் வெட்டியுள்ளார்.

பலத்த காயமடைந்த மாமியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சந்தேகநபரை கைது செய்த பொலிஸார், நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த சேலம் மகளிர் நீதிமன்றம் அந்நபருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, கடந்த மே மாதம் 25 ஆம் திகதியன்று தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேன்முறையீடு செய்தார். சுப்பிரமணி மேல் முறையீடு செய்தார். வழக்கு கடந்த 18ஆம் திகதியன்று விசாரணைக்கு வந்தது.

"தனது மகள், மருமகனுடன் வாழ வேண்டும். 3 குழந்தைகளை வளர்க்க வேண்டும். அதனால் என்னை வெட்டிய மருமகனை மன்னித்து விட்டேன். எங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டது

அதனால் மருமகனை விடுதலை செய்யுங்கள்" என்று மாமியார் கூறினார்.

அதனையடுத்து தண்டனையை இரத்துச் செய்து நீதிமன்றம் அவரை விடுதலைச் செய்தது.

கேரளா

# ஒரே பஸ்ஸில் கடமையாற்றும் தம்பதி



20 ஆண்டுகளாக காதலித்திருந்தாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக திருமணம் செய்துக்கொண்ட கேரள தம்பதியினர், தற்போது ஒரே அரசுப்பேருந்தில் சாரதி மற்றும் நடத்துனராக பணியாற்றுவரும் சுவாரஸ்சிய காதல் கதை சோசியல் மீடியாவில் வைரலாகி வருகிறது.

இது குறித்து கேரள பேருந்தில் நடத்துனராக பணியாற்றும் தாரா கூறுகையில், ஒவ்வொரு நாளும் நான் மற்றும் எனது கணவர் கிரி ஆகிய இருவரும் அதிகாலை 1.15 மணிக்கு எழுந்துவிடுவோம். பின்னர் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு சுமார் 2 மணிக்கு பேருந்து டெப்போவுக்கு செல்வோம்.

பின்னர் பேருந்தை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுவதாகவும் பின்னர் காலை 5.50 மணிக்கு எங்களுடைய பணிகளைத் தொடங்குவோம் என மகிழ்வுடன் கூறுகிறார். காதல் வாழ்க்கையைப் போராட்டத்துடன் தொடங்கிய இவர்களின் வாழ்க்கை ருசிகரமாக்கிய இவர்கள் தற்போது இணையத்தைக் கலக்கி வருகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது.

ராமநாதபுரம்

# இலங்கைக்கு கடத்தவிருந்த கடல் அட்டைகள் பறிமுதல்



ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் வாகன சோதனையில் நேற்று (21) ஈடுபட்டிருந்த வனத்துறை அதிகாரிகள் ராமநாதபுரத்தில் இருந்து ராமேசுவரம் நோக்கி வந்த சரக்கு வாகனம் ஒன்றை நிறுத்தி சோதனை செய்துள்ளனர்.

சோதனை செய்தபோது அந்த வாகனத்தில் சங்கு மூடைகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சாக்கு பைகளில் இருந்த சுமார் 30 கிலோ கிராம் கடல் அட்டைகளை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து தொண்டியை சேர்ந்த 2 பேரை கைதுசெய்து விசாரணை நடத்தி வருவதுடன் சரக்கு வாகனத்தையும் பறிமுதல் செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டையின் சர்வதேச மதிப்பு சுமார் 4 இலட்சம் ரூபாய்க்கும்கு அதிகமாக இருக்கும் என்றும் ராமேசுவரத்தில் உள்ள வியாபாரி ஒருவரிடம் கொடுத்து இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகின்றது.

சென்னை

# 100 பெண்களை சீரழித்தவர் மனைவியால் சிக்கினார்

திரைப்பட இயக்குனர் என தன்னை இனங்காட்டிக்கொண்ட ஒருவர், சினிமாவில் நடிப்பதற்கு சந்தர்ப்பம் வாங்கிக் தருகின்றேன் எனக்கூற, 100க்கும் மேற்பட்ட இளம் பெண்களை ஏமாற்றி, சீரழித்தவருக்கு எதிராக, சம்பந்தப்பட்டவரின் மனைவியே முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் தன்னை திருமணம் செய்துகொண்டவர், சில மாதங்களுக்கு முன்னர் தன்னிடமிருந்த பணம் மற்றும் நகைகளை அபகரித்துவிட்டார். இவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட நான், அவருடைய கையடக்க தொலைபேசியை சோதனையிட்டேன்.

அதில், பல பெண்களுடன் ஆபாசமான வார்த்தைகளை பேசுவது, நிர்வாணப்படங்களை வைத்திருத்தல் மற்றும் ஒலிப்பதிவுகளும் இருந்தன. அதுதொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன். அத்துடன், பல பெண்களை ஏமாற்றி பாலியல் உறவும் கொண்டுள்ளார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை,

# சிறுமி கருமுட்டை விவகாரம்

## சீலை அகற்ற உத்தரவு



ஈரோடு சிறுமி கருமுட்டை வழக்கில் மருத்துவமனை மையமொன்றுக்கு வைக்கப்பட்ட சீலை அகற்றுமாறு சென்னை உச்சீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சீலை அகற்றக்கோரி தனியார் மருத்துவமனை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே உச்சநீதிமன்றம் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளது. மருத்துவமனை மீதான குற்றச்சாட்டு குறித்து மீண்டும் விசாரித்து 12 வாரங்களில் முடிவெடுக்க தமிழக அரசுக்கு ஆணையிட்டுள்ளது. புதிய நோயாளிகளை சேர்க்க தடை விதித்த அரசு உத்தரவையும் .ரத்து செய்தது உயர்நீதிமன்றம்.

இதனிடையே, 16 வயது சிறுமியின் வயதை 27 என மாற்றி, அவரிடம் 9 முறை கருமுட்டை எடுத்ததாக கூறி மற்றுமொரு ஸ்கேன் நிலையம் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனடிப்படையில் ஸ்கேன் சென்டரில் உள்ள உபகரணங்கள் மீது சீல் வைக்கப்பட்டது. இதை எதிர்த்து மருத்துவமனை தரப்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. உரிய நோட்டீஸ் கொடுத்து விளக்கம் பெறாமல் அவசரமாக சீல் வைக்கப்பட்டுள்ளது என குற்றசாட்டப்பட்டுள்ளது.

புதுடெல்லி,

# மாணவிகளின் உள்ளாடை: பெண்கள் ஐவர் கைது

மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் நுழைவு பரீட்சைக்குத் தோன்றிய மாணவிகளின் உள்ளாடைகளும் கழற்றப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மேலுமிருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் அனைவரும் பெண்களாவர்.

மாணவியொருவர் செய்துள்ள முறைப்பாட்டில், " பரீட்சைக்கு சென்ற என்னை அங்கிருந்தவர்கள் உள்ளாடை மற்றும் மேலாடையை கழற்ற கூறி சோதனை செய்தனர்.

என்னை போல பல மாணவிகளின் உள்ளாடைகளையும் கழற்றி சோதனை செய்தனர். கழற்றப்பட்ட உள்ளாடைகளை அங்குள்ள ஒரு அறையில் வைத்திருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சம்பவம் தொடர்பாக 5 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளா

# திருடனின் அரை நிர்வாண பேனர்

திருவனந்தபுரம், பகுதியிலுள்ள கடையொன்றுக்குள் முகத்தை துணியால் கட்டிக்கொண்டு அரை நிர்வாணமாக இரவில் புகுந்த திருடனுக்கு தும்மல் வந்தமையால் முகத்துணி கழன்று விட்டது. அதனை திருடன் கவனிக்கவில்லை அவருடைய உருவம் சி.சி. ரி.வி கமெராவில் பதிவானது. அதனை, கடையின் உரிமையாளர் படமெடுத்து பெனர் செய்து தன் கடைக்கு முன்பாக ஒட்டியுள்ளார். அடையாளம் காட்டுமாறும் தொலைபேசி எண்ணையும் கொடுத்துள்ளார்.

சீனா

# நுளம்பின் டிஎன்ஏ முடிவால் சிக்கிய திருடன்

சீனாவில் நுளம்பின் DNA வை வைத்து திருடனை பொலிஸார் கண்டுபிடித்த சம்பவமானது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் புஜியான் மாகாணத்தில் புஜோ எனும் பகுதியில் சில நாட்களுக்கு முன்னர் பூட்டிகிடந்த வீட்டுக்குள் இருந்த பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் திருட்டு நடந்த வீட்டில் சோதனை மேற்கொண்ட போது வீட்டின் சுவற்றில் நுளம்பின் இரத்தக் கறை படிந்து இருந்ததையும், அதனருகே இரண்டு நுளம்புகள் இறந்துள்ளதையும் பார்வையிட்டுள்ளனர். இதனிடையில் புதியதாக வர்ணம் பூசப்பட்ட வீடு என்று வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக தன்னை கடித்த நுளம்பை திருடன் சுவற்றுடன் நசுக்கி இருக்கலாம் என பொலிஸார் கருதினர். இதனால் நுளம்பு நசுக்கப்பட்டிருந்த சுவற்றில் படிந்துஇருந்த இரத்தக் கறை தடயவியல் ஆதாரமாக எடுக்கப்பட்டு டிஎன்ஏ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

இவ் ஆய்வில் கிடைத்த டிஎன்ஏ முடிவை அப்பகுதியில் குற்றபின்னணி கொண்ட திருடர்களின் டிஎன்ஏ விபரங்களுடன் காவல்துறையினர் ஒப்பிட்டு பார்த்தனர். அப்போது குற்ற பின்னணிகொண்ட சாய் என்ற பெயர் கொண்ட நபரின் இரத்தத்தின் டிஎன்ஏவும், திருட்டு நடந்த வீட்டில் இருந்த இரத்தக்கறையின் டிஎன்ஏவும் பொருந்தியது. அதன்பின் சாய் அந்த வீட்டில் நுழைந்து திருடியதை காவல்துறையினர் உறுதிசெய்து அவரைக் கைது செய்தனர்.

சுவிட்ஸர்லாந்து

# ஸைவரலாகும் மறைக்கப்படா படுக்கையறை

சுவிட்சர்லாந்தில் உள்ள 'zero star hotel 'என அழைக்கப்படும் ஐந்து நட்சத்திரக் ஹோட்டலொன்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறித்த ஹோட்டலானது வெளிப்புறச் சுவர்களற்று அமைக்கப்பட்டுள்ளமையே மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளமைக்கான காரணமாகும்.

சுவிட்ஸர்லாந்தின் வலைஸ் (Valais) என்கிற மாகாணத்தில் சைல்லோன் (Saillon) என்ற கிராமத்திலேயே இவ் ஹோட்டலானது அமைக்கப்பட்டுள்ளது.

**“ அறைகள் இல்லாத இந்த ஹோட்டல் இரண்டு பேர் படுக்கும் வசதி கொண்ட ஒரு கட்டில், அருகில் இரண்டு நாற்காலிகள், மேஜை, அவற்றில் விளக்குகள், காலை உணவு, பானம் உள்ளிட்டவற்றுடன் மட்டுமே அமைக்கப்பட்டு இருக்கிறது.**

இது குறித்து அவ் ஹோட்டலின் உரிமையாளரான ரிக்லின் (Riklin) என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்” குறைவான தேவைகளுடன் நிறைவுடன் வாழ மனிதர்கள் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

இவை குறித்தும் மக்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு ஹோட்டல் அமைக்கப்பட்டுள்ளது.

அறைகள் இல்லாத இந்த ஹோட்டல் இரண்டு பேர் படுக்கும் வசதி கொண்ட ஒரு கட்டில், அருகில் இரண்டு நாற்காலிகள், மேஜை, அவற்றில் விளக்குகள், காலை உணவு, பானம் உள்ளிட்டவற்றுடன் மட்டுமே அமைக்கப்பட்டு இருக்கிறது.

இங்கு ஒரு இரவு தங்குவதற்கான கட்டணம் 325 சுவிஸ் ஃப்ராங்குகள். இந்த சலுகை செப்டம்பர் 18-ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் ” இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

# கேஸால் வந்த அதிஷ்டம்

அமெரிக்காவின்ள வடக்கு கரோலினா பகுதியை சேர்ந்தவர் வில்லியம் ஜோன்ஸ்.

32 வயதான இவர் சமையல் எரிவாயு வாங்க ஒரு கடைக்கு சென்றுள்ளார். அப்போது அங்கே அதிஷ்ட இலாபச் சீட்டு விற்கப்பட்டது.

இதனை கண்ட அவர், குறைந்த தொகைக்கு ஒரு அதிஷ்ட இலாபச் சீட்டை வாங்கியுள்ளார். அச்சீட்டில் அவருக்கு 500 டொலர்கள் பரிசுத் தொகை விழுந்துள்ளது.

இதையடுத்து மீண்டும் ஒருமுறை 20 டாலர் பணத்துக்கு சீட்டு வாங்கியுள்ளார்.

அப்போது யாரும் எதிர்பார்க்காத விதமாக அவருக்கு 100 மில்லியன் டொலர்கள் பரிசுத் தொகை கிடைத்துள்ளது .

இந்த அதிர்ஷ்டத்தை சற்றும் எதிர்ப்பாராத வில்லியம், கிடைத்த லாட்டரி பணத்தை தனது திருமணத்திற்கு செலவிடப்போறதாக கூறியுள்ளார்.




ஜப்பான்

# குரங்குக்கு எதிராக புகார்

குரங்கொன்றின் மீது மக்கள் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்த விநோத சம்பவம் ஜப்பானில் இடம்பெற்றுள்ளது ஜப்பானில் உள்ள யமக்குச்சி மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் ஓகோரி என்ற பகுதி அமைந்துள்ளது.

குறித்த பகுதியில் அண்மையில் வீடொன்றில் உறங்கி கொண்டிருந்த பச்சிளம் குழந்தையை குரங்கொன்று கடுமையாகத் தாக்கியுள்ளது.



அத்துடன் அப்பகுதியில் இருந்த 2 சிறுமிகள் உட்பட பலரையும் அக்குரங்கு கொடூரமாகத் தாக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் இது தொடர்பாக பொலிஸாருக்குப் பொதுமக்கள் அளித்த புகாரின் பேரில் குரங்கை தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மேலும் குரங்கை கண்டுபிடிக்கும் வரையில் பொதுமக்கள் யாரும் வீட்டின் ஜன்னல் மற்றும் கதவுகளை திறந்து வைக்க வேண்டாம் எனவும் பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

பாகிஸ்தான்

# அமெரிக்க யுவதி மீது கூட்டுப் பாலியல் வன்புணர்பு

பாகிஸ்தானைச் சேர்ந்த இருவரால் அமெரிக்க யுவதி யொருவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

21 வயதான குறித்த யுவதி இணையதளம் மூலமாக பாகிஸ்தானைச் சேர்ந்த முஸ்மல் சிப்ரா என்பவருடன் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில் இவருடைய அழைப்பின் பேரில் அவ் யுவதி அமெரிக்காவிலிருந்து கராச்சிக்கு வந்துள்ளார்.



அங்கிருந்து அவரை முஸ்மல் சிப்ரா மற்றும் அவருடைய நண்பர் அசாம் கோசா கான் மாவட்டத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு அவரை முஸ்பல் சிப்ரா மற்றும் அசாம் கோசா ஆகிய 2 பேரும் சேர்ந்து கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளதோடு அவற்றை வீடியோவாக எடுத்து வைத்துக்கொண்டு வெளியில் சொன்னால் வீடியோவை ஊடகத்தில் வெளியிட்டு விடுவோம் என மிரட்டிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இளம்பெண் தனக்கு நடந்த கொடுமைகளை வீடியோ பதிவின் மூலம் பேசி வெளியிட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் குறித்த இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இந்தியா:

# ODI தொடர் இன்று ஆரம்பிக்கிறது



மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, போர்ட் ஒஃப் ஸ்பெய்னில் இன்றிரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் தொடங்குகின்றது.

இத்தொடரில் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, விராட் கோலி, ஜஸ்பிரிட் பும்ரா, ஹர்டிக் பாண்டியா, றிஷப் பண்டுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ள நிலையில், ருத்துராஜ் கைகவாட், இஷன் கிஷன், ஷுப்மன் கில், ஷ்ரேயாஸ் ஐயர், சஞ்சு சாம்ஸன் ஆகியோருக்கு குழாமில் தமதிடங்களை உறுதிப்படுத்த சிறந்த வாய்ப்பாகக் காணப்படுகிறது.

பந்துவீச்சுப் பக்கமும் அர்ஷ்டீப் சிங், ஆவேஷ் கான் போன்றோருக்கு தமதிடங்களை குழாமில் உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது.

மறுபக்கமாக இந்த இந்தியாவை வீழ்த்துவதற்கும் துடுப்பாட்டத்தில் பெருமளவு முன்னேற்றத்தை மேற்கிந்தியத் தீவுகள் காண்பிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக அணித்தலைவர் நிக்கலஸ் பூரான், ஷே ஹோப் போன்றோறிடமிருந்து நீண்ட இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுவதுடன், கைல் மேயர்ஸ், றொவ்மன் பவல், ஷமராஹ் ப்ரூக்ஸ் போன்றோரிடமிருந்தும் குறிப்பிடத்தக்களவு இனிங்ஸ் எதிர்பார்க்கப்படுகிறது.




வ்ரவேரியன் வோர் –19 தொடர்:

# சம்பியனானது சம்மாந்துறை விளையாட்டுக் கழகம்

■ நூருல் ஹுதா உமர்

“வ்ரவேரியன் வோர் -19” இருபதுக்கு - 20 கடினபந்து கிரிக்கெட் தொடரில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சாய்ந்தமருது அஸ்ரப் ஐக்கிய பொதுவிளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற சாய்ந்தமருது வ்ரவ் லீடர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 40ஆவது ஆண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் கொரோனா காரணமாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது பீமா விளையாட்டுக் கழகத்தை வென்றே சம்மாந்துறை சம்பியனானது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சம்மாந்துறை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், எஸ்.எம். அப்ஹாம் 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், ஆர். எம். ரப்சன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு, 135 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பீமா 18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களையே பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஜே.எம். ரிழ்வான் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக அப்ஹாம் தெரிவானதுடன், தொடரின் நாயகனாக நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழக வீரர் நிக்ஸி அஹமட் தெரிவானார்.

# யுனைட்டெட்டுக்குச் செல்ல விரும்பாத டி ஜொங்க்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டில் இணைவதிலும் பார்க்க ஜேர்மனி புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் அல்லது இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியில் இணைவதற்கே ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் மத்தியகளவீரரான பிராங்க் டி ஜொங்க் விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முதன்மையாக பார்சிலோனாவை விட்டு வெளியேற 25 வயதான டி ஜொங்க் விரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# டிபாலாவைக் கைச்சாத்திட்ட றோமா

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்னாள் முன்களவீரரான போலோ டிபாலாவை இன்னுமொரு சீரி ஏ கழகமான றோமா கைச்சாத்திட்டுள்ளது.

மூன்றாண்டு ஒப்பந்தத்திலேயே றோமாவுடன் 28 வயதான டிபாலா இணைந்துள்ளார்.

ஜுவென்டஸில் ஐந்து சீரி ஏ பட்டங்களை வென்ற டிபாலா, 293 போட்டிகளில் விளையாடி 115 கோல்களைப் பெற்றிருந்தார்.

# டொட்டமுண்ட் செல்கிறாரா லூயிஸ் சுவாரஸ்?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமானஅத்லெட்டிகோ மட்ரிட்டின் முன்களவீரரான லூயிஸ் சுவாரஸைக் கைச்சாத்திடுவதா என்பது குறித்து ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான டொட்டமுண்ட் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

தமது முன்களவீரரான செபஸ்டியன் ஹாலரை எதிர்வுகூற முடியாத காலத்துக்கு டொட்டமுண்ட் இழந்துள்ள நிலையிலேயே மேற்படி தகவல் வெளியாகியுள்ளது.

35 வயதான சுவாரஸைக் கைச்சாத்திட தென்னமெரிக்க, ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கழகங்களும் முயல்கிறமை குறிப்பிடத்தக்கது.

விவிஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 22 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.